## தலைப்பு 296 - இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்

---

### 1. நிதிக்கூற்றுகள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரசட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுகள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடார்ந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஆகஸ்ட் 27 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தை தவிர, 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 இலக்கமுடைய அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை, மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமானதுமான பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்று தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்படுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுகள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கும் இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுகளைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்திரனதும் பொறுப்பாகும்.

.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள், மற்றும் பொறுப்புகள் தொடர்பான முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கப்பூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வப்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கப்பூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு.

---

ஓட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாக கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதார தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னனியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகள் கட்டுபாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) மற்றும் 38 பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன.

(ஆ) இவ் அறிக்கையில் 1.6.2. (அ),(ஆ), மற்றும் (இ) பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அவதானிப்புக்கள் தொடர்பான முன்னைய ஆண்டிற்குரிய எனது பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்றுடனான ACA – 2 (i) இலக்க மாதிரி படிவத்தில் செலவு விடயம் 2401 இலக்கத்தின் கீழ் ரூபா 200,000 ‘‘துணை மதிப்பீட்டு ஒதுக்கீடு’’ குறைத்தலாக அறிக்கையிடப்பட்டிருப்பினும், அதற்கான காரணங்கள் விளக்கப்படவில்லை. அவ்வாறே, ACA – 2(ii) மாதிரி படிவதத்தில் சரியான மிகுதியாக காட்டப்பட வேண்டிய பெறுமதி ரூபா 245,245 ஆகவிருப்பினும் காட்டப்பட்டிருந்த பெறுமதி ரூபா 45,245 ஆக காணப்பட்டது. | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் வேண்டும். | 05/2019 ஆம் இலக்க வரவுசெலவு சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதிஏற்பாடுகளில் 10 சதவீதம் நிறுத்தி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், பணிநிலையினர் பயிற்சி செலவு விடயத்தில் ரூபா 200,000 ஆன நிதிஏற்பாடு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

**1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பாடாமை**

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|---|
| (அ) | **பிணைகள் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) பிரகாரம், பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 891(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உள்ளடங்கிய வண்ணம் உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைகள் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். | வருங்காலத்தில் நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணைகள் பதிவேடொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) | **வாகன லொங் புத்தகம்** | | |
| | நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம் வாகன லொங் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 1645 (அ) இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பொது 267 மாதிரியின் பிரகாரம் வாகன லொங் புத்தகம் அனைத்து வாகனங்களுக்காவும் பேணப்படல் வேண்டும். | அனைத்து வாகனங்கள் தொடர்பாகவும் பேணிச் செல்கின்ற லொங் புத்தகங்கள் இற்றைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், வருங்காலத்தில் இன்னுமாக சரியாக பேணிச் செல்வதற்கு குறித்துக் கொள்ளப்படுகின்றது. |
| (இ) | **குழு கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள்** | | |
| | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.11.3.(அ) வழிக்காட்டலின் பிரகாரம் பெறுகை குழு கூட்டங்களின் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும். | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.11.3(அ) வழிக்காட்டலின் பிரகாரம் மற்றும் பெறுகை கைப்புத்தகத்தின் 2.11.3 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் அறிக்கைகள் பேணப்படல் வேண்டும். | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 2.11.3 இன் மாதிரியின் பிரகாரம் தொடர்படைய அறிக்கைகள் பேணிச் செல்வதற்கு எதிர்காரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.6.3** கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் | நிதி மற்றும் உள்ளக கட்டுப்பாடு செயற்திறனாக்குவதற்கு காலத்திற்கு காலம் பணிநிலை கூட்டங்களின் போது செயன்முன்னேற்றம் கலந்துரையாடப்பட்டு அதற்கான |

| | | |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்பொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுகின்றமை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் உறுதி செய்யப்பட வேண்டியதுடன், அவ் அமைப்பின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் அமைப்பு செயற்திறனாக பேணிச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெறவேண்டியிருப்பினும், அவ் மீளாய்வுகள் எழுத்து மூலமாக மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு முன்வைக்கப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறான மீளாய்வு மேற்கொள்ளப்பட்டமைக்கான அறிக்கை கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேவையான நடவடிக்கைகள் எடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். அக் கலந்துரயையாடல்களின் போது அடையாளப்படுத்தப்பட்ட உள்ளக கட்டுப்பாடு பலவீனமாகக் கூடிய இடங்கள் வலுவாக்குவதற்காக 2018/01, 2018/02, 2018/03, 2018/04, 2019/01, 2019/02, 2019/03, 2019/04, 2020/01, 2020/02, 2020/03 மற்றும் 2020/04 இலக்கங்களையுடைய உள்ளக சுற்றறிக்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. |

### 1.6.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இனங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இனங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு காட்டப்படுகின்றது.

| **அவதானிப்பு** | | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணக்கமின்மைகள்** | | |
| (அ) சட்டரீதியான ஏற்பாடுகள் | | | |
| (i) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரச் சட்டம். | மருந்து மாதிரியொன்று மட்டும் இறக்குமதி செய்வதென்றால் இறக்குமதி உரிமம் பத்திரமொன்று பெறப்பட வேண்டியிருப்பினும், ரூபா 11,753,264 ஆன பெறுமதியான மருந்துகள் அவ்வாறான உரிமம் பத்திரம் பெறப்படாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்தது. மேலும், மருந்துகள் | சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தேடி பார்க்கப்பட்டு நடடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | **2015 இன் 05 ஆம் இலக்க தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரச்சட்டம்**<br>மருந்து மாதிரியொன்றின் இறக்குமதியின் போது இறக்குமதி செய்யப்படுகின்ற நிறுவனத்தினால் அதற்கான தொடர்புடைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உரிமம் |

| | | | |
|---|---|---|---|
| | இறக்குமதி செய்யப்படுவதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பதிவுச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் விஞ்சி இருக்கையில் ரூபா 964,897 பெறுமதியான மருந்துகள் இறக்குமதி செய்வதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | | பத்திரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். உரிமம் பத்திரத்தில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகாரசபையினால் பெற்றுக்கொடுக்கப்படுகின்ற அங்கீகாரத்தில் இறக்குமதி செய்யக்கூடிய மருந்தின் அளவு குறிப்பிடபடாதிருந்தால் இறக்குமதி செய்யப்படுகின்ற மருந்தின் பெறுமதியில் (CIF பெறுமதியில்) 10% மாதிரி அளவொன்றின் இறக்குமதிக்காக அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும். அவ்வாறாயினும், மருந்து மாதிரி மட்டும் இறக்குமதி செய்யப்படுவதென்றால் அவ் நிறுவனத்தின் ஊடாகவும், மேற்குறிப்பிட்ட விதத்தில் தொடர்புடைய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு உரிமப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.<br><br>மருந்துகள் இறக்குமதிக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த பதிவுச் சான்றிதழின் செல்லுபடியாகும் காலம் கடந்திருக்கையில் மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையினால் தொடர்படைய பதிவுச் சான்றிதழ்களின் மூலப்பிரதி முத்திரை இடப்பட்டு இன்வொயிஸ் இலக்கம் மற்றும் அளவு குறிப்பிடப்பட்டு இருப்பின் அம் மருந்துகள் அம் மருந்துகள் செலவு வைக்கப்படும். |
| (ii) 1987 இன் 28 ஆம் இலக்க சட்டத்தின் திருத்தப்பட்ட 1969 இன் 01 ஆம் இலக்க | நியமத்திற்கு முரணாக இறக்குமதியொன்று மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதியாளர்கள் வர்த்தமானியில் | 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு சட்டத்தின் 11 E | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு நாயகத்தின் ஆலோசனைக்கேற்ப இந்த திணைக்களத்தின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகாரச்சட்டத்தின் 11E உறுப்புரை | பிரசுரிக்கப்படுகின்ற விளம்பரத்தினூடாக அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | உறுப்புரையின் பிரகாரம் நியமத்திற்கு முரணாக இறக்குமதி செய்கின்ற இறக்குமதியாளர்கள் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படுகின்ற அறிவித்தலின் ஊடாக அறிக்கப்படுவதற்கு தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | கொள்கை பிரிவினால் "Import Compulsory List" இன் கீழ் காணப்படும் இறக்குமதி செய்யப்படும் உறுப்படிக்கள் இலங்கை தரங்கள் மற்றும் கொள்கைகளுக்கு அமைவாக காணப்படல் வேண்டும் எனவும், அவ்வாறாகாத நிறுவனங்களுக்காக நியாயப்படுத்தப்படாத ஆவணம் தயாரித்து அது வர்த்தமானி ஊடாக பிரசுரிக்கப்படவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அந் நடைமுறை தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளதுடன், 2019.01.21 ஆம் திகதி இலங்கை கட்டளை நிறுவனத்திற்காக 2019.01.01 ஆம் திகதி தொடக்கம் 2019.12.31 ஆம் திகதி வரை தரம் மற்றும் கொள்கைகளுக்கு அமையாத பொருட்கள் மற்றும் நிறுவனங்கள் தொடர்பாக திணைக்களத்திற்கு அறியத்தருமாறு கடிதமொன்று வெளியிடப்பட்டுள்ளது. இது வரையிலும் அதற்காக ஏதேனும் குறித்த பதில் பெறப்படாமையினால் தீங்கிழைக்கும் ஆவணங்கள் தயாரித்தல் மற்றும் வர்த்தமானி விளம்பரமொன்று வெளியிடும் பிரமாணங்கள் உள்ளடக்கப்பட்ட வர்த்தமானி வரைபொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணத்தின் 1646 ஆவது பிரமாணம் | வாகனங்களின் பிரயாண குறிப்பு அனைத்து மாதங்களும் முடிந்ததன் பின்னர் அடுத்த மாதத்தில் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருப்பினும், அவ்வாறு பிரயாண | சட்ட ரீதியான தேவைப்பாடுகள் தேடி அறியப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வாகனங்களின் பிரயாணக் குறிப்பு எதிர்காலத்தில் குறித்த காலக்கட்டத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது என தயவுடன் அறியத்தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குறிப்பு சமர்ப்பிக்கப்படுவதற்கு நீண்ட தாமதம் ஏற்பட்டிருந்தது. | | |
| (இ) | 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/40 இலக்க அதிவிசேட வர்த்தமானி | 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 04 ஆம் உறுப்புரையின் (3) ஆம் உப உறுப்புரை மற்றும் 14 ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 26 ஆம் உறுப்புரையின் கீழ் அமைச்சரினால் மேற்கொள்ளப்படுகின்ற கட்டளைகள் தொடர்பாக 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/40 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் ஊடாக குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் இறக்குமதி செய்யப்படும் போது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் உரிமம் பத்திரம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். எனினும், இலங்கை முதலீட்டுச் சபையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றினால் 2017 மற்றும் 2018 ஆம் வருடங்களில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த செலவு காப்பீடு சரக்கு பெறுமதி (மி.ர.கெ) ரூபா 19,760,224 ஆன திடக்கழிவு 2,131,325 கிலோகிராம் உள்ளடக்கப்பட்ட 102 கொள்கலன்களுக்காக அவ்வாறு உரிமம் பத்திரம் பெறப்படாமல் நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் நடைமுறை அல்லது வேறு முறையில் இறக்கமதியாளர்கள் செயற்பட்டுள்ளமை அறிந்தவுடனே விரைவாக செயற்படல் வேண்டும். | 2017 நவம்பர் 09 ஆம் திகதிய 2044/40 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி Hayleys Free Zone (Pvt) Ltd இனால் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த அதன் பொருட்கள் தொடர்பாக மேற் குறிப்பிட்ட அதிவிசேட வர்த்தமானி தொடர்புடையதல்ல. மேலும், 1969 இன் 01 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சட்டத்தில் மற்றும் அதற்கான திருத்தங்கள் உள்ளடக்கப்பட்ட 1985 இன் 48 ஆம் இலக்க மற்றும் 1987 இன் 28 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டங்களும் நேரடியாகவே அல்லது மறைமுகமாகவோ தொடர்பாகாது. Hub Regulation இற்கு தொர்புடையது 2012 இன் 12 ஆம் இலக்க நிதிச் சட்டமாகும் என அறியத்தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.1 ஆம் உறுப்புரை | பிரதான பெறுகை திட்டம் மாதிரிக்கு அமைவாக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறையாக பெறுகை திட்டம் தயாரிக்கப்படல் வேண்டும். | அரச பெறுகை வழிக்காட்டி கோவையின் 4.2.1. இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தொடர்புடைய அறிக்கைகள் பேணிச் செல்வதற்கு வருங்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | 2020 செப்தெம்பர் 24 ஆம் திகதிய 5/2019 ஆம் இலக்க தேசிய வரவு செலவு சுற்றறிக்கை. | 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதிய தேசிய வரவுசெலவு சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாட்டில் 25 சதவீதம் நிறுத்தி வைக்கப்பட வேண்டியிருப்பினும், 03 செலவு விடயங்களுக்கு தொடர்புடைய அந் நிதி ஏற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 செப்தெம்பர் 24 ஆம் திகதிய வரவுசெலவு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | BD/NS/103/03/18/11 இலக்க மற்றும் 2019 யூலை 11 ஆம் திகதி எங்கள் திணைக்களத்திற்கு பிரதியுடன் அபிவிருத்தி உத்திகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட வரவுசெலவு திணைக்கள கடிதத்தின் ஊடாக 4/2019 சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன நிதிஏற்பாடுகள் நிறுத்தி வைக்கப்படுகின்ற நிறுவனங்கள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த கடிதத்தில் இந்த திணைக்களத்தின் மூலதன செலவுக்காக ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடு நிறுத்தி வைக்கப்படவில்லை. அக் காரணத்தினால் மூலதன செலவுகளில் 15 சதவீத நிதிஏற்பாடு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை. வரவுசெலவு சுற்றறிக்கை 5/2019 இன் பிரகாரம் மூலதன செலவிற்காக நிதிஏற்பாட்டில் 10 சதவீதம் மட்டும் பணிநிலையினர் பயிற்சி செலவு விடயத்தின் நிதிஏற்பாடுகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்தும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 5 மீண்டெழும் செலவு விடயங்களுக்கு தொடர்புடைய மொத்தம் ரூபா 51,900,000 ஆன பிரதான மதிப்பீடு ரூபா 54,682,450 வரை திருத்தப்பட்டிருந்ததுடன், அது சதவீதமாக 10 தொடக்கம் 59 சதவீதம் வரையான வரம்பில் காணப்பட்டது. | மதிப்பீடுகள் உண்மை அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும். | பிரதான மதிப்பீடு மற்றும் திருத்தப்பட்ட மதிப்பீட்டின் இடையில் வேறுபாடு காணப்பட்ட பின்வரும் செலவு விடயங்களுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் நிதிஏற்பாடு திருத்தப்பட்ட செலவு விடயங்களின் செலவுகள் அடையாளப்படுத்தப்பட்டிராததுடன், ஆண்டினுள் ஏற்பட்ட வேறுபாடுகள் காரணத்தினால் இந்த செலவு விடயங்களுக்காக நிதிஏற்பாடு திருத்தப்படுவதற்கு நேர்ந்தது. அந்த செலவு விடயங்களின் நிதிஏற்பாடு திருத்துவதற்கு ஏற்பட்ட காரணங்கள் பின்வாறுமாறு காட்டப்படுகின்றது. .<br><br>296-1-1-1001, 296-1-1003 :- வரவுசெலவு மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் உள்ள பணிநிலையினரை கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. ஆண்டினுள் புதிய உத்தியோகத்தர்கள் இணைத்தல் மற்றும் உத்தியோகத்தர்கள் இடமாற்றமாகி வருகைத்தரல் காரணத்தினால் இந்த செலவு விடயத்தின் நிதிஏற்பாடு அதிகரிப்பதற்கு நேரியுள்ளது<br><br>296-1-1-1101 - 2019 ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்திலிருந்து சனாதிபதி செயலாளர் அலுவலகத்தின் ஊடாக நாடு முழுவதும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த வேலைத் திட்டங்களுக்காக உத்தியோகத்தர்களை பங்குகொள்ள செய்ய நேர்ந்தமையினால் இந்த செலவு விடயத்தில் மேலதிக நிதிஏற்பாடு ஒதுக்குவதற்கு நேர்ந்தது. 2019 ஆம் ஆண்டின் வரவுசெலவு மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான வேலைத்திட்டங்கள் தொடர்பாக அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. .<br><br>296-1-1-1201 - வரவுசெலவு சுற்றறிக்கை 7/2019 மற்றும் 4/2019 பிரகாரம் செலவுகளை மட்டுப்படுத்தல்.<br><br>296-1-1-1404 – விண்ணப்பிக்கப்பட்ட நிதிஏற்பாடு கிடைக்கபெறாமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 5 மீண்டெழும் செலவு விடயங்களுக்காக பெற்றுக்கொடுக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 6,600,000 ஆன நிகர நிதிஏற்பாட்டில் ரூபா 4,498,510 மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எஞ்சிய ரூபா 2,101,490 ஆனதுடன், அந்த எஞ்சிய நிகர நிதிஏற்பாட்டில் 12 சதவீதம் தொடக்கம் 37 சதவீதம் வரையான வீதத்தில் காணப்பட்டது. | மதீப்பீடு உண்மையான அடிப்படையில் தயாரிக்கப்படல் வேண்டும். | உங்கள் கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள 296-1-1-1408 ஆன செலவு விடயம் 296-1-1-1409 செலவு விடயமாக திருத்தப்பட வேண்டியதுடன் செலவு விடயங்களில் காட்டப்பட்டுள்ள சேமிப்பு சதவீதத்துடன் இணங்குகின்றது. |
| (இ) | 2019 ஆம் ஆண்டில் வரவுசெலவு மதிப்பீடு தயாரிக்கப்படுவதற்காக வழிக்காட்டல்கள் குறிப்பிடப்பட்டு வெளியிடப்பட்டிருந்த 2018 யூலை 17 ஆம் திகதிய தேசிய வரவுசெலவு சுற்றறிக்கை 4/2018 ஊாக செயலாற்றலை அடிப்படையாக கொண்ட வரவுசெலவொன்று தயாரிக்கப்படுவதற்காக வலியுறுத்தப்பட்டிருப்பினும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்காக வரவுசெலவு மதிப்பீடு தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் திணைக்களத்தின் செயல்திறன் குறிக்காட்டிகளாக,<br>1. வர்த்தமானி அச்சிடும் முன்னேற்றம்<br>2. நிகழ்நிலை கணினி அமைப்பு செயற்படுத்தல்.<br>3. ஒரு உத்தியோகத்தருக்காக நடத்தப்படும் பயிற்சி வேலைத்திட்டங்கள் மணித்திளால சராசரி போன்றன அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. அக் குறிக்காட்டிகள் அடையப்படுவதற்கு முடியுமான விதத்தில் வரவுசெலவு மதிப்பீட்டு தகவல்கள் தேசிய வரவுசெலவு திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டது. |

## 2.2 வங்கி கணக்குகளை செயற்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| மிகை வருமானத்திலிருந்து தமது நாளாந்த செலவினங்களை தீர்ப்பனவு செய்வதற்கு போதுமான பண ஒதுக்கம் (ஏறத்தாழ 02 மில்லியன்) பேணப்பட்டு மிகுதி பணம் திறைச்சேரிக்கு அனுப்பட வேண்டியிருப்பினும், அவ்வாறு செயற்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | நிதிப்பிரமாணம் 177(1) பிரகாரம், நிறுவனத்தினால் சேகரிக்கப்பட்ட வருமானத்திலிருந்து தமது நாளாந்த செவினங்களை தீர்ப்பனவு செய்வதற்கான போதுமான பண ஒதுக்கீடாக பேணப்பட்டு மிகுதி பணம் முடிந்த வரையில் விரைவாக திறைச்சேரிக்கு அனுப்பப்படல் வேண்டும். | இந்த திணைக்களத்தின் வரவுகளில் 95 சதவீதத்திற்கு மேற்பட்ட பெறுமதி வங்கி வரைவுகளால் ஆனது. வங்கி வரைவுகள் செயல்படுத்துவதற்கு ஒரு நாள் செல்வதுடன், காசுப் புத்தகத்தின் மீதி மற்றும் முந்தய நாள் வங்கிக் கூற்றின் பிரகாரம் காசு மீதி இணக்கம் செய்யப்பட்டு திறைச்சேரிக்கு அனுப்பப்படும். இக் காரணத்தினால் ஒரு நாளில் செயல்படுத்தப்படாத பண மீதியொன்று நாளாந்தம் நிறுத்தப்படுவதுடன், அந் நிறுத்தப்பட்ட நாளாந்த மீதி நீக்கப்பட்ட போது உங்களால் அறிவிக்கப்பட்ட ரூபா 02 மில்லியன் நிறுத்தி வைக்கும் பரிந்துரைக்கப்பட்ட எல்லை 2020 சனவரி மாதத்திலிருந்து (கொரோனா நிலை |

தவிர) கருத்திற் கொள்ளப்பட வேண்டிய சதவீதத்தில் அடையப்பட்டுள்ளது. 2020 யூன் மாதத்திலிருந்து நாளாந்தம் பணம் திறைச்சேரிக்கு அனுப்பப்பட்டு அப் பரிந்துரை செய்யப்பட்ட எல்லை அடையப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

திணைக்களத்தினால் மீளாய்வாண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மேற்கொள்ளப்படாத பணிகள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| **(அ)** வலையமைப்பு கணினி முறைமை ஸ்தாபித்தல் | | |
| (i) ICT நிறுவனத்துடன் காணப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தினூடாக 02 கட்டங்களின் கீழ் இந்த செயற்திட்டம் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், முதல் கட்டத்தில் 60 ஏற்றுமதியாளர்களில் 12 நபர்கள் மட்டும் பதிவு செய்யப்பட்டிருந்தனர். | திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்த திகதிக்கு பணி நிறைவேற்றுவதற்கு தீவிரமாக தலையிடுவதன் மூலம் குறிக்கோள் அடையப்படல் வேண்டும். | முதல் கட்டம் தொடங்கப்பட்டதன் பின்னர் அது வாடிக்கையாளர்களினால் பயன்படுத்தும் போது ஏற்பட்ட சிக்கல்கள் தீர்த்தல் விரைவாக மேற்கொள்வதற்காக எங்கள் நிறுவனத்தினால் எப்போதும் கடிதங்கள் ஊடாக மற்றும் கூட்டங்கள் ஊடாக அறிக்கப்படுகின்றது. எங்கள் நிறுவனத்திற்கு வருகை தருகின்ற வாடிக்ககையாளர்கள் மிகவும் வேலை மும்முரமான மற்றும் வியாபார ரீதியில் செயற்படும் நபர்களாவார்கள். அதனால், அவர்கள் விரைவான சேவையையே எதிர்பார்ப்பர். முதல் கட்டம் தொடங்கியன் பின்னர் அவர்கள் மிகவும் முயற்சியுடன் அமைப்பினை பன்படுத்துவதற்கு ஆயத்தப்பட்டாலும், ஆரம்பத்திவேயே வந்த சிக்கலான நிலைமைகள் விரைவாக தயாரிக்கப்பட்டு கொடுக்கப்படாமையினால் அவர்களின் ஆர்வம் படிப்படையாக குறைவடைவதுடன், எங்கள் நிறுவனத்திற்கு வருகைதந்து பணிகளை நிறைவேற்றிக் கொள்வர். அதற்கு பிரதான காரணமானது குறித்த நேரத்தில் |

| | | |
|---|---|---|
| | | ICTA நிறுவனம் மற்றும் அமைப்பு அபிவிருத்தி நிறுவனத்தினால் தொடர்புடைய சிக்கல்கள் தீர்க்கப்படாமையாகும். இது தொடர்பாக அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பினும், இது வரையிலும் அதை நிறைவேற்றிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், இது வரையில் இற்றைப்படுத்தப்பட வேண்டிய தரவுகள் முதல் கட்டத்திற்கு உள்ளடக்கப்பட முடியாமையும் பிரச்சனையாகியுள்ளது. அவ்வாறே, தொடர்புடைய நிறுவனத்தின் ஊடாக இரண்டாம் கட்டம் அபிவிருத்தி செய்தல் தாமதமாகல் காரணத்தினால் முழு வசதியுள்ள இ- சேவை வாடிக்கையாளர்களுக்கு விரைவாக பெற்றுக் கொடுப்பதற்கு காணப்பட்ட சந்தர்ப்பம் தவறவிடப்பட்டது. |
| | திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்த திகதிக்கு பணி நிறைவு செய்யப்படுவதற்கு தீவிரமாக தலையிட்டு குறிக்கோள் அடையப்படல் வேண்டும். | இ - சேவை மூலமாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படுகின்ற நிறுவனங்களுக்காக பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய பரிந்துரை பதிவு செய்யப்பட்ட 03 நிறுவனங்களுக்கு சொந்தமாக இருக்கவில்லை. அவ்வாறே, முதல் கட்டத்தில் காணப்பட்ட சிக்கல்கள் தீர்க்கப்பட்டு வழங்காமையினால் பரிந்துரை வழங்கப்படுகின்ற நிறுவனங்களுடன் நேரடியாகதொடர்புக்கொள்ள முடியாது போனது. |
| (ii) இ - சேவையின் ஊடாக பரிந்துரை பெற்றுக் கொள்ளாமல் நேரடியாக தொடர்புடைய நிறுவனங்களுக்கு சென்று பரிந்துரை பெற்றுக் கொள்வதற்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. . | திட்டமிடப்பட்ட பிரகாரம் குறித்த திகதிக்கு பணி நிறைவு செய்யப்படுவதற்கு தீவிரமாக தலையிட்டு குறிக்கோள் அடையப்படல் வேண்டும். | இ - சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இறக்குமதியாளர்கள் அழைக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்ட போதிலும், அதன் பின்னர் அடையாளப்படுத்தப்பட்ட சிக்கல் காரணத்தினால் மற்றும் அவை விரைவாக தீர்க்கப்படுவதற்கு ICTA நிறுவனம் மற்றும் தொடர்புடைய அமைப்பு அபிவிருத்தி நிறுவனம் தவறியது. அவ்வாறே, கொடுப்பனவு செலுத்துவதற்கு மற்றும் உரிமம் / வரவு அட்டைக்கு வருவதற்கு நேரிடுவதனால் சில நிறுவனங்கள் விண்ணப்ப படிவங்கள் மட்டும் |

| | | |
|---|---|---|
| | | முன்வைப்பதற்கு தயக்கம் காட்டுவதனை காணக்கூடியதாக இருந்தது. ( இதற்காக இல I இன் விடையும் பொருந்தும்) |
| (iii) திணைக்களத்தின் ஊடாக இறக்குமதி மற்றும் ஏற்றமதியாளர்கள் இ - சேவைக்கு ஆர்வமூட்டும் முறைமையொன்று நிறுவனத்திற்குள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாளர்கள் ஈர்த்துக் கொள்வதற்காக உத்திகளை பயன்படுத்தல் . | இ - சேவை ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் இறக்குமதியாளர்கள் அழைக்கப்பட்டு உற்சாகப்படுத்தப்பட்ட போதிலும், அதன் பின்னர் அடையாளப்படுத்தப்பட்ட சிக்கல் காரணத்தினால் மற்றும் அவை விரைவாக தீர்க்கப்படுவதற்கு ICTA நிறுவனம் மற்றும் தொடர்புடைய அமைப்பு அபிவிருத்தி நிறுவனம் தவறியது. அவ்வாறே, கொடுப்பனவு செலுத்துவதற்கு மற்றும் உரிமம் / வரவு அட்டைக்கு வருவதற்கு நேரிடுவதனால் சில நிறுவனங்கள் விண்ணப்ப படிவங்கள் மட்டும் முன்வைப்பதற்கு தயக்கம் காட்டுவதனை காணக்கூடியதாக இருந்தது. ( இதற்காக இல I இன் விடையும் பொருந்தும்) |
| (iv) இ- சேவை வழங்கப்பட்டிருப்பினும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதியாளர்கள் இதற்காக இங்காமையின் அடிப்படையில் பிரதிலாபம் குறைந்திருந்தது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்படல் வேண்டும். | அமைப்பிற்கு தொடர்புடைய வழங்குனரொருவர் தெரிவு செய்தல், செலவு மதிப்பீடு தயாரித்தல், ஆலோசனை மற்றும் தொழிநுட்ப அறிவு போன்ற அனைத்து நடவடிக்கைகளும் ICTA நிறுவனத்தின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக எங்கள் நிறுவனம் பங்கேற்கவில்லை. |
| | முறையாக உண்மையான அடிப்படையில் மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும். | அமைப்பிற்கு தொடர்புடைய வழங்குனரொருவர் தெரிவு செய்தல், செலவு மதிப்பீடு தயாரித்தல், ஆலோசனை மற்றும் தொழிநுட்ப அறிவு போன்ற அனைத்து நடவடிக்கைகளும் ICTA நிறுவனத்தின் நிதிஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக எங்கள் நிறுவனம் பங்கேற்கவில்லை. |
| (v) 2019 திசெம்பர் மாதம் வரையிலும் இரண்டாம் கட்டத்திற்காக தகுதியான ேசை வழங்குனரொருவர் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

| | | | |
|---|---|---|---|
| | (vi) திட்ட கட்டத்தில் 11 ஆம் கட்டத்திற்காக ரூபா 07 மில்லியன் செலவொன்று மதிப்பிடப்பட்டிருப்பினும், பின்னர் அது ரூபா 45 மில்லியன் வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | | |
| **(ஆ)** | இறக்குமதி மற்றும் ஏற்றுமதி திணைக்களத்தினால் பழைய வாகனங்கள் கொண்டுவரப்படுவதற்கு தொடர்புடைய உரிமம் பத்திரம் தொடர்பாக பின்னூட்டல் மேற்கொள்ளும் முறைமையொன்று காணப்படாமை. | உரிமம் பத்திரம் வெளியிடு செயன்முறை வர்த்தமானி அறிவித்தல்களுக்கு அமைவாக காணப்படல் வேண்டும். | இந்த திணைக்கள்தின் ஊடாக வெளிடப்படுகின்ற பற்றுக் குறிப்பு (Debit Note) சமர்ப்பிக்கப்பட்டவுடன் வாகனம் விடுவிக்கப்படல் சுங்க திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளல் சாதாரண முறைமையாகும். அவ்வாறு பற்றுக் குறிப்பு இல்லாது வாகனங்கள் விடுவித்தல் தொடர்பாக விசாரணை அல்லது அறிவித்தல் சுங்கத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.<br><br>மேலும், இறக்குமதி அல்லது ஏற்றுமதி கட்டுப்பாட்டு உரிமம் பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் சாதாரணமாக குறித்த கால வரையறைக்குள் தானாகவே இரத்து செய்யப்படுவதனால், உரிமம்பத்திரத்திற்காக தொடர்புடைய நிறுவனம் இறக்குமதி செய்யப்பட்டமை குறித்து பின்னூட்டல் மேற்கொள்ளப்படமாட்டாது.<br><br>எவ்வாறாயினும் உரிமம் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள உறுப்படிகள் இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் உரிமம் பத்திரம் கட்டாயமாக செலவு வைக்கப்பட வேண்டும்மென நிபந்தனையொன்று (**It is compulsory to debit this license at every instance of importation of goods**.) 2020 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து அனைத்து உரிமம் பத்திரங்களிலும் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (இ) 2019 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இறக்குமதி உரிமம்பத்திரம் மற்றும் வெளியிடப்பட்ட பற்று அறிவித்தல்கள் இணக்கம் செய்யும் போது சில தொகுதிகள் தொடர்புடையதாக வெளியிடப்பட்டிருந்த உரிமம்பத்திரங்களை பார்க்கிலும் குறைவாக பற்று அறிவித்தல்கள் வெளியிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்னூட்டல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிமம்பத்திரம் வெளியிடப்பட்ட பின்னர் அவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்ற இறக்குமதிகள் தொடர்பாக முறையான பின்னூட்டல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | வெளியிடப்பட்டுள்ள உரிமம் பத்திரங்கள் அனைத்தும் செலவு வைக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணக்கூடியதாக இருந்தது. அதற்கான காரணமாவது, இறக்குமதி செயன்முறையினுள் வழங்குனர்கள் மற்றும் இறக்குமதியாளர்கள் இடையில் ஏற்படுகின்ற ஒப்பந்த உறவு வெவ்வேறான விலகல்களுக்கு உட்பட்டு அவ் இறக்குமதி ரத்து செய்யப்படுகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றமையாகும். அங்கு இறக்குமதியாளர்களினால் இந்த திணைக்களத்திற்கு அந்த உரிமம் பத்திரத்திற்காக பொருட்கள் இறக்குமதி செய்யப்படாமை குறித்து உறுதி செய்யப்படலொன்று பெற்றுக் கொடுக்கப்பட மாட்டாது. மேலும், இறக்குமதி ஏற்றுமதி உரிமம்பத்திரத்தின் செல்லுபடியாகும் காலம் சாதாரணமாக குறித்த கால வரையறைக்குள் தானாகவே ரத்து செய்யப்படுகின்றமையினால் உரிமம் பத்திரத்திற்காக தொடர்புடைய இறக்குமதி செய்யப்பட்டுள்ளதா என பின்னூட்டல் மேற்கொள்ளப்படாது. |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| 2006 பெப்ரவரி 10 ஆம் திகதி நடைப்பெற்ற அரச கணக்குகள் குழு கலந்துரையாடலின் பிரகாரம் உரிமம் பத்திரம் வெளியிடப்பட்டதன் பின்னர் பின்னூட்டல் பணிக்காக வேறான அலகொன்று ஸ்தாபிக்க வேண்டியிருப்பினும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் குழுவின் கட்டளையின் பிரகாரம் விசாரணை அலகொன்று ஸ்தாபிக்கப்படல் வேண்டும். | விசாரணை அலகொன்று ஆரம்பித்தல் தொடர்பாக உள்ளக கலந்துரையாடலொன்று திணைக்களத்தின் பணிப்பாளர் உத்தியோகத்தர்களின் அங்கத்துவத்துடன் நடத்தப்பட்டதுடன், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் உத்தியோகத்தரொருவரின் வளத்தின் அடிப்படையில் அவ் அதிகாரசபையினுள் விசாரணை பிரிவு செயற்படும் விதம் தொடர்பாக தெளிவுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களும் நடத்தப்பட்டன. பாவனையாளர் அலுவலகள் அதிகார சபையின் மற்றும் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் சட்டம் கற்கப்பட்டு விசாரிக்கும் முறைமை தொடர்பான |

| | | |
|---|---|---|
| | | நடைமுறை இது வரையில் தயாரிக்கப்பட்டு வருவதுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளரின் ( கட்டுப்பாட்டு மற்றும் கொள்கை) மேற்பார்வையின் கீழ் பிரிவொன்று ஸ்தாபித்து சில உத்தியோகத்தர்களை கொண்டு ஆரம்பிப்பதற்கு தீர்மாணிக்கப்பட்டுள்ளது. |

## 4. மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு. | பரிந்துரை. | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்து. |
|---|---|---|
| மீளாய்வாண்டிள் அங்கீகரிக்கப்பட்ட பணிநிலை 104 ஆக காணப்பட்டதுடன் உண்மை பணிநிலை 85 ஆக காணப்பட்டமையினால் 19 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் சம்பள தொகுதிக்காக ரூபா 43.7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவு ரூபா 514,098 ஆக காணப்பட்டது. | திணைக்களத்தின் செயற்திறன் அபிவிருத்தி செய்யப்படுவதற்கு காணப்படுகின்ற அத்தியாவசிய பதவி வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும். | பதில் பெற்றுக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. |